**தலைப்பு 22 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 22 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தினால் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்காளராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செயற்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி செயற்பாடுகளும் திட்டமிடப்படல். (திணைக்களத்தின் நடவடிக்கை களை நிதி மற்றும் திணைக் களத்தின் கட்டளைகளுக்கு இணங்க இணங்காமல் அல்லாமல் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட உயர்தர நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்) | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிரு க்காமை. | 2.1.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கை போதியளவில் திட்ட மிடப்படாமை. | 2.4 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.6 |

| | | | |
|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | 1. இணக்கமின்மைகள்<br>2. மனித வள முகாமைத் துவத்தின் குறைபாடு கள் | 2.7<br>2.8 |
| 127(2) | தனது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு இருக்கும் செலவு விடயங்கள் உட்பட புதிதாக அல்லது மிகையாக செலவிடுவதற்கான பிரேரணைகள் சிக்கனமாகவும் மற்றும் செயற்திறனாக அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ள ப்பட வேண்டும். | பெறுகை செயற்பாடு களை செயற்படுத்துவதி லுள்ள குறைபாடுகள் | 2.4.1 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக் கப்படுகின்றன எனவும் மற்றும் தாம் அவற்றில் கையொப்ப மிடுவதற்கு முன்னர் அமைச்சி னால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவின த்திற்கு இடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடுகள் தம்மால் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்படல். | 1. வருடாந்த செயலாற் றல் அறிக்கை சமர்ப் பிக்கப்படாமை.<br>2. வருடாந்த பாதீட்டு எல்லையை விஞ்சி கட்டுப்பாடுகளுக்கு உட்படல் | 2.3<br>2.5(ஆ) |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடு களில் நிதி ஏற்பாடு மற்றும் செலவினத்திற்கிடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை | 2.5(அ) |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அலுவலகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 02 பிரதான செய்பணிகள் காணப்பட்டதுடன், எதிர்பார்த்த விளைவுகள் பெற்றக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முக்கியத்துவதத்தினை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள் திட்டம் (Activity Plan) செயற்படுத்திய காலசட்டகம் (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளின் எதிர்பார்த்த வெளியீடுகள்/ விளைவுகள் (output/outcome) மதிப்பிடப்பட்டு குறிப்பிட்டிருக்கவில்லை.

#### 2.1.2 செய்பணிகள் நிறைவேற்றப்படாமை

செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க முன்னேற்ற அறிக்கை தயாரித்திருக்காமையால், செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க முன்னேற்றத்தை பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

### 2.2 முறைப்பாடுகள் தொடர்பாக செயற்பட்ட முறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு பரிசோதனை மேற்கொள்வதற்கு மற்றும் அறிக்கையிடுவதற்கு உரிய மீதியாக இருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 457 தொகையாகும். மீளாய்வாண்டின் போது நிறுவனத்திற்கு கிடைத்திருந்த 1380 முறைப்பாடுகள் உட்பட 2017 ஆண்டின் போது பரிசோதனை மேற்கொள்வதற்கு வேண்டியிருந்த முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 1837 தொகையாக இருந்தது.

(ஆ) பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மற்றும் இடைத்தரப்பினை விசாரணை செய்த பின்னர் அறிவிக்கப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை 24 ஆக காணப்பட்டது.

(இ) பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் படி உரிய நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 47 ஆக இருந்தது.

(ஈ) உரிய நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் அறிக்கை அழைக்கப்பட்ட பின்னர் அதனை முறைப்பாட்டாளருக்கு அறிவித்த பின்னர் தொடர் செயல் நடவடிக்கை எடுத்தல் நிறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 318 ஆகும்.

(உ) அறிக்கைகள் அழைக்கப்பட்ட பின்னர் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்த முறைப்பாடுகள் 103 ஆகும். பரிசோதனை மேற்கொள்ளப்படாமல் சமாதானப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 69 ஆகும்.

(ஊ) இலகுவாக அலுவல்களை பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 660 ஆகும்.

(எ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 616 முறைப்பாடுகள் பரிசோதனை செய்வதற்கு மற்றும் அறிக்கை இடுவதற்கு மீதியாக காணப்பட்டன.

## 2.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கான செயலாற்றுகை அறிக்கைகள் 2018 ஜுலை 12 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

## 2.4 பெறுகைகள் திட்டமிடல் மற்றும் ஆரம்ப கட்டம்

அலுவலகத்திற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கள் மற்றும் சேவைகள் நிறைவேற்றுவதற்காக ரூபா 1.9 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்தப் பணம் பயன்படுத்தப்பட்டிருந்தது. வழங்கப்பட்டிருந்த ஒதுக்கியிருந்த ஏற்பாடுகள் தொடர்பாக தயாரிக்க வேண்டியிருந்த பெறுகைத் திட்டங்கள் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) பிரதான பெறுகைத் திட்டம்

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2.1 இன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய 03 வருட காலத்திற்கான எதிர்பார்த்த பெறுகை அலுவல்கள் அடங்கிய பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வருடாந்த உத்தேச பெறுகைத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய பீடீ/360/3/101/1/1/பீ இலக்கங் கொண்ட நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த உத்தேச பெறுகைத் திட்டம் தயாரித்திருக்கவில்லை.

(i) வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடுகளுக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,843,000 இனால் வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடுகள் மிகைத்து பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2.2 மற்றும் 4.2.3 இனால் குறிப்பிட்டுள்ள அறிவுரைகள் மற்றும் பெறுகை கையேட்டில் அதற்கு உரிய படிவத்தின் பிரகாரம் பெறுகைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பெறுகை செயற்பாடுகளுக்காக பெறுகை நேரசூசி தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் ஒவ்வொரு பெறுகை கருமங்களும் மேற்கொள்வதற்காக எதிர்பார்த்திருந்த காலசட்டகத்தில் அறுதியாக இனங்காணாமல் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 2.4.1 பெறுகை செயன்முறையை செயற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைத் திட்டத்தின் பிரகாரம், ரூபா 100,000 இற்கான மதிப்பீட்டுக் கிரயம் ஒன்றின் கீழ் அலுவலகத்தில் உள்ளக தொலைபேசி தொடர்புகள் (Intercom) வலை பின்னல்

நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக பெறுகைக் குழு நியமனம் செய்து அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.4 இன் பிரகாரம் விலைமனு அழைப்பு மேற்கொள்ளாமல் ரூபா 319,221 தொகை செலவிடப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. இங்கு ரூபா 219,221 தொகையினால் எதிர்பார்த்த கிரயம் மிகைத்திருந்தது.

(ஆ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 1.3.2 இற்கு முரணாக ரூபா 219,857 தொகைக்கான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) அலுவலகத்தின் கணினிகளை வலைபின்னல் செய்வதற்காக மற்றும் கோவைகள் முகாமைத்துவப்படுத்துவதற்காக கூட்டுத்தொகை ரூபா 650,000 இற்கான கிரய மதிப்பீடு செய்யப்பட்டு, பெறுகை திட்டத்தில் உட்படுத்தி இருந்த போதிலும் அவ் விடயங்கள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றியிருக்கவில்லை.

(ஈ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.4.2(அ), 5.3.10(அ), 6.3.1(ஆ) ஆகியவற்றின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 235,450 இற்கான பெறுகை ஒன்று தொடர்பாக பண்டங்களின் விபரங்கள், எண்ணிக்கை, ஒப்படைக்கப்பட்ட நேரம், இடம், பொறுப்பு, செல்லுபடியாகும் விலைமனு சமர்ப்பிக்க வேண்டிய கால எல்லை மற்றும் அனைத்து விலைமனுக்களும் சீல் பண்ணப்பட்ட உறை ஒன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் ஆகிய விடயங்கள் வழங்குனர்களுக்கு அனுப்பியிருந்த விலைமனு அழைப்பு ஆவணங்கள் அடங்கியிருக்கவில்லை. அதே போல் வழிகாட்டல் 6.3.3 மற்றும் 6.3.6 இன் பிரகாரம் விலைமனு திறக்கும் மற்றும் மதிப்பாய்வு செய்யும் குழு நியமனம் செய்திருக்கவில்லை.

(உ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 6.3.3 மற்றும் 6.3.6 இன் படி பதிவுத் தபாலில் அல்லது பெறுகை நிறுவனத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்வதனால் அல்லது கேள்வி பெட்டியில் போடுவதன் மூலம் விலைமனு பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும் அதன் பிரகாரம் விலைமனு பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

(ஊ) பெறுகை கைநூலில் 7.11.1 இன் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் பயன்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் விலைமனு மதிப்பாய்வு செய்தல் செயன்முறை பூர்த்தி செய்த உடனேயே விலைமனு மதிப்பாய்வு செய்த அறிக்கை பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

**2.5 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

---

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 8.66 | 8.61 | 0.05 | 0.58 |
| | மூலதன | 0.80 | 0.80 | - | - |
| | **மொத்தம்** | **9.46** | **9.41** | **0.05** | **0.53** |
| 2014 | மீண்டுவரும் | 10.48 | 9.11 | 1.37 | 13.07 |
| | மூலதன | 0.36 | 0.33 | 0.03 | 8.33 |
| | **மொத்தம்** | **10.84** | **9.45** | **1.39** | **12.82** |
| 2015 | மீண்டுவரும் | 13.64 | 11.83 | 1.81 | 13.2 |
| | மூலதன | 0.5 | 0.03 | 0.47 | 94.0 |
| | **மொத்தம்** | **14.14** | **11.86** | **2.28** | **16.1** |
| 2016 | மீண்டுவரும் | 15.70 | 15.59 | 0.11 | 0.70 |
| | மூலதன | 0.35 | 0.12 | 0.23 | 65.71 |
| | **மொத்தம்** | **16.05** | **15.71** | **0.34** | **2.12** |
| 2017 | மீண்டுவரும் | 24.68 | 22.92 | 1.76 | 7.1 |
| | மூலதன | 1.47 | 1.43 | 0.04 | 3.1 |
| | **மொத்தம்** | **26.15** | **24.35** | **1.80** | **6.9** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) மிகை ஏற்பாடுகள் மேற்கொண்டிருத்தல்**

04 செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 11.5 மில்லியன்களுக்கான மிகை ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்தால் அந்த செலவு விடயங்களுக்கு உரிய ஏற்பாடுகளில் இருந்து ரூபா 9.8 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தியிருந்தமையால் சேமிக்கப்பட்டிருந்த தொகை தேறிய ஏற்பாடுகளில் 14 சதவீதம் முதல் 91 சதவீதம் வரை வீச்சு அளவினைக் கொண்டிருந்தது.

**(ஆ) வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அனுகுதல்**

2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு இணங்காமல் ஒரு செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 467,106 இற்கான ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 51,933 இற்கான ஈடுபாட்டு பொறுப்பினை ஏற்படுத்தியிருந்தது.

## 2.6 பதிவேடு மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அலுவலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| கணினிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/2002/02 இலக்க கொண்ட திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணினிகள், துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| பெறுகைகள் குழு மற்றும் தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் தின வரவுப் பதிவேடுகள் | அரச பெறுகை வழிகாட்டல் கோவையில் வழிகாட்டல் 2.11.2 இன் பிரகாரம் குழுவின் செயலாளரினால் தின வரவுப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |
| குழுக் கூட்ட அறிக்கைகள் | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.11.3(அ) இன் பிரகாரம் பெறுகை குழுக்களின் கூட்ட அறிக்கைகள் பேணப்பட வேண்டும். |
| விலைமனு அழைப்பு பதிவேடு | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.2.1 இன் பிரகாரம் விலைமனு அழைத்தல் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |
| முற்பணப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் முற்பணப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |

## 2.7 இணக்கமின்மை

### 2.7.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 138(4) | 243,065 | பூர்வாங்க அங்கீகாரம் இன்றி வழங்கல்கள் மற்றும் சேவைகளுக் கான செலவுகள் சான்றுபடுத்தியி ருந்தது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 168 | 13,873,611 | பெறுகைகளுக்கான பற்றுச்சீட்டுகள் வழங்கியிருக்கவில்லை. |

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

### 2.8.1 இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணிகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அலுவலகத்தினால் ஆளுக்குரிய வேதன செலவினத் தொகுதிக்காக ரூபா 9,444,390 தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 01 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 19 | 13 | 06 |
| (iv) | ஆரம்ப நிலை | 09 | 05 | 04 |
| (v) | அமைய/ஒப்பந்த | 01 | - | 01 |
| | மொத்தம் | 32 | 20 | 12 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் அலுவல்கள் தடையின்றி நடாத்திச் செல்வதற்குத் தேவையான இது வரை இனங்கண்டிருந்த 12 வெற்றிடங்களை மீளாய்வாண்டு இறுதி வரை நிரப்புவதற்கு அலுவலகத்திற்கு இயலாதுள்ளது.

(ஆ) பல வருடங்களாகக் காணப்படும் நிர்வாக உத்தியோகத்தர் (முறைப்பாடு) வெற்றிடத்தினை 2017 ஆண்டின் போதும் நிரப்பி இருக்கவில்லை.

**2.8.2 பதவியணியினருக்கு பயிற்சி வழங்கல்**

கடந்த 05 வருட காலப் பகுதியில் பயிற்சி வழங்கும் விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் ரூபா 210,000 தொகையில் ரூபா 43,112 தொகை அதாவது சுமார் 21 சதவீதம் ஆகிய குறைந்த அளவே பயன்படுத்தப்பட்டிருந்தது.